تاميلي

தமிழ்

معهد السنة
As-Sunnah College

MahadSunnah

# أفطروا ولا حرج

# நோன்பை விட அனுமதிக்கப்பட்டோர் யார்?


**ஆசிரியர்:**

**கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்**

முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர்,

ம∴ஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.

*www.alsarhaan.com*

WWW.MAHADSUNNAH.COM


CamScanner

# நோன்பை விட அனுமதிக்கப்பட்டோர் யார்?

பேரருளாலன் அல்லாஹ் தன் அடியார்கள் மீது கொண்ட பேரன்பின் காரணமாக அவர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகள், சிரமங்கள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு மார்க்க சட்டதிட்டங்களில் பல தளர்வுகளையும் சலுகைகளையும் வழங்கியுள்ளான்.

அவற்றுள் ஒன்றுதான் ஒருவர் நோன்புடன் இருக்கும் நிலையில் மறந்து ஏதையேனும் சாப்பிட்டு விட்டால் அது குற்றமில்லை என்ற சட்டமாகும்.

நபியவர்கள் கூறினார்கள் :”ஒருவர் நோன்பாளியாக இருக்கும் நிலையில் மறந்து சாப்பிட்டுவிட்டால் (அவரது நோன்புக்கு எந்தப் பாதிப்பும் இல்லை) அவர் அந்த நோன்பை தொடரட்டும், அல்லாஹ்தான் அவரை அவ்வாறு உண்ணவும், பருகவும் வைத்தான்”.

இவ்வாறே ஒருவர் தீராத நோய், அல்லது முதுமை காரணமாக நோன்பு நோற்க முடியாது போனால் நோன்பு நோற்பதை விட்டுவிட்டு, நோற்காமல் தவறிய ஒவ்வொரு நோன்புக்கும் பதிலாக ஒரு ஏழைக்கு உணவளிக்க முடியும்.

மாதவிடாய் மற்றும் பிரசவ உதிரம் வெளிப்படும் பெண்கள் நோன்பு நோற்க கூடாது என இஸ்லாம் தடுத்துள்ளது.

ஒரு கர்ப்பிணி அல்லது பாலூட்டும் தாய் நோன்பு நோற்பதனால் தனக்கோ அல்லது தனது குழந்தைக்கோ பாதகம் ஏற்பட்டு விடும் என அஞ்சினால் நோன்பு நோற்காமல் இருக்க மார்க்கம் சலுகை வழங்கியுள்ளது.

தொழுகைகளை சுருக்கித்தொழும் தூரத்தை கொண்ட பிரயாணம் மேற்கொள்ளும் ஒரு பிரயாணியும் தனது பிரயாணத்தின் போது நோன்பு நோற்காமல் இருக்க முடியும்.

ஆயினும் மேற்குறித்த மாதவிடாய், மற்றும் பிரசவ உதிரம் வெளிப்படும் பெண்கள் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார், பிரயாணிகள் ஆகியோர் தாம் நோற்காமல் விட்ட நோன்புகளை ரமழானுக்குப் பின்னர் கழாஃ செய்ய வேண்டும்.

தீரக்கூடிய நோய்களைக் கொண்டோர் மூன்று வகையினராக இருப்பர் :

1. நோன்பு நோற்பதனால் எவ்வித சிரமமும் இல்லை, அதனால் எந்த பாதகமும் ஏற்படாது என்ற நிலையிலிருப்போர். இத்தகையோர் நோன்பு நோற்பது அவசியமாகும்.

2. நோன்பு நோற்பது சிரமம், ஆயினும் அதனால் எந்தப் பாதகமும் தனக்கு ஏற்படாது என்ற நிலையிலிருப்போர். இத்தகையோர் அல்லாஹ் வழங்கிய சலுகையைப் பயன்படுத்தி நோன்பு நோற்காமல் இருப்பதே சிறந்ததாகும்.

3. நோன்பு நோற்பதனால் நிச்சயமாக பாதகம் ஏற்படும் என்ற நிலையிலிருப்போர். இத்தகையோர் நோன்பு நோற்பது தடைசெய்யப்பட்டதாகும்.



CamScanner